2010 மே 14]

(உ) விளாத்திகுளம், வைப்பார் ஆற்றில் சாக்கடைக் கழிவு நீர் கலப்பதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, வைப்பார் ஆற்றில், விளாத்திகுளம் பேரூராட்சியில் உள்ள அனைத்து சாக்கடைக் கழிவு நீரும் கலக்கிறது. அதாவது, அந்தச் சாக்கடைக் கழிவு நீர் முழுவதும் அங்கே தடுப்பணை கட்டியுள்ள பகுதியில் கலக்கிறது. தடுப்பணை கட்டிய அந்தப் பகுதியிலிருந்துதான் குடிநீர் வடிகால் வாரியத்திற்குரிய மூன்று Pumping station-கள் மூலம், அந்தப் பகுதியிலிருந்து ரெட்டியபட்டி, தத்தநேரி, அரியனேயபுரம், மந்திகுளம், கோட்டநத்தம் உட்பட 50 கிராமங்களுக்குக் குடிநீர் செல்கின்றது. அங்கே சாக்கடைக் கழிவு நீர் கலப்பதனால், அடிக்கடி அந்தக் கிராமப் பகுதிகளிலே காலரா போன்ற தொற்று நோய்கள் வருகின்றன.

பல தடவை அந்தக் கிராமங்களிலே மருத்துவ முகாம் போடக்கூடிய சூழ்நிலையில், தொற்று நோய் அடிக்கடி பரவியுள்ளது. ஆகையால், போர்க்கால அடிப்படையில், அங்கே பேரூராட்சியினுடைய சாக்கடைக் கழிவு நீரை வைப்பார் ஆற்றில் கலக்காமல், வேறு பகுதியில் கொண்டு விடுவதற்கோ அல்லது recycling முறையிலே அதைப் பயன்படுத்துவதற்கோ பேரூராட்சி நிருவாகத்தை வலியுறுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அதோடு, இன்றைக்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதானே? உட்காருங்கள். மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு எடுத்து வைத்திருக்கக்கூடிய அந்தக் கோரிக்கைக்கு, நிச்சயமாக அவர் கூறியபடியே போர்க்கால அடிப்படையிலே அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.